**புலமைச் சொத்துக்கள் நிதியம் - 2017**

புலமைச்சொத்துக்கள் நிதியத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் அதிகாரச் சட்டத்தின் 176(6) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2018 செப்டெம்பர் 05 ஆந் திகதி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, புலமைச் சொத்துக்கள் நிதியத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை அரசாங்க பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 109 ஆம் பந்தியின் பிரகாரம் செலவுகள் வகைப்படுத்திக் காட்டப்படாது அனைத்து செலவுகளும் நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் நிதி நிலைமைக் கூற்றிலுள்ள விடயங்கள் மேற்கூறிய நியமத்தின் பிரகாரம் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் சொத்துக்கள் மீள் பெறுமதியிடப்பட்டு அவற்றின் நியாயப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு செய்தல் ஆரம்பிக்கப்படுதலானது அவற்றினைப் பயன்படுத்துவதற்கு ஆயத்தமான நிலைக்கு கொண்டுவந்ததன் பின்னரான போதிலும் வினைத்திறனான ஆயுட்காலம் அல்லது உள்ளமை இல்லாத, நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்ற வேளையில் நிர்மாணங்களை நிறுத்த வேண்டிய இருந்த புலமைச் சொத்துக்களை மேம்படுத்தல் நிலையத்திற்காக அதுவரை செலவு செய்யப்பட்ட ரூபா 22,298,751 தொகை மூலதனமாக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் ரூபா 1,114,937 வீதம் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 4,459,750 தொகை பெறுமானத்தேய்விற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு திறைசேரி உண்டியல்களுக்குரிய மற்றும் திறைசேரி பிணை முறிகளுக்குரிய மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் மற்றும் பெற வேண்டிய வட்டி வருமானம் முறையே ரூபா 806,738 மற்றும் ரூபா 10,639 ஆல் குறைத்தும் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்குரிய ரூபா 320,804 மொத்த தொகையான செலுத்த வேண்டிய மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

2003 இன் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் அதிகாரச் சட்டத்தின் 175 ஆம் பிரிவின் கீழ் 2006 இன் 01 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் பணிப்புரையின் 58(2) ஆம் பிரிவின் பிரகாரம் முகவர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் மற்றும் பதிவு செய்வதற்கான ஒரு பரீட்சையை தம்மால் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் அல்லது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் உதவியுடன் நடாத்துவதற்கு பணிப்பாளர் நாயத்திற்கு இப்பிரிவு மற்றும் பணிப்புரையின் பிரகாரம் முடியுமாக இருந்த போதிலும் அவ்வாறான பரீட்சையை நடாத்தி முகவர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தரணியான ஒரு நபர் மாத்திரம் முகவராக இன்று வரை நியமிக்கப்பட்டிருந்தார்.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 75,794,322 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 60,154,755 ஆக இருந்ததினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 15,639,567 ஆல் முன்னேற்றமடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 15,232,565 ஆல் அதிகரித்தல் மேற்கூறிய முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 49,692,263 ஆக இருந்த மிகையானது உயர்ந்த நிலையுடன் மீளாய்வாண்டளவில் ரூபா 75,794,322 வரை முன்னேற்றமடைந்திருந்தது. எவ்வாறாயினும், ஊழியர் பணிக்கொடை, நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் செம்மையாக்கியபோது 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 53,998,456 தொகையான பங்களிப்பு மீளாய்வாண்டளவில் ரூபா 83,923,137 வரை முன்னேற்றமடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்திறனும் மீளாய்வும்

வணிகக் குறியீடு, ஆக்கவுரிமை உத்தரவுப் பத்திரம், தொழில்நுட்பத் திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கிய புலமைச் சொத்துக்களை நிருவகித்தல் நிறுவனத்தின் பிரதான செயற்பாடாக இருந்ததுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அதன் செயலாற்றல் பின்வருமாறாகும்.

**(அ) வணிகக் குறியீடுகளை பதிவு செய்தல்**

(i) மீளாய்வாண்டில் பதிவுசெய்த வணிகக் குறியீடுகளின் எண்ணிக்கை 10,622 ஆக இருந்ததுடன் அவை 1979 இலிருந்து 2016 வரை பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களாகும். கணக்காய்விற்குப் பயன்படுத்தப்பட்ட தெரிவுகளின் பிரகாரம் 20 கோவைகளுக்குரிய வணிகக் குறியீடுகளைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்து அவற்றைப் பரீட்சிப்பதற்காக 07 மாதங்களிலிருந்து 10 ஆண்டுகள் வரையிலான காலமும் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டணத்தை செலுத்தியதன் பின்னர் வர்த்தமானியில் வெளியிடுவதற்காக 01 ஆண்டிலிருந்து 03 ஆண்டுகள் வரையான காலமும் பதிவு செய்தல் கட்டணத்தை செலுத்திய திகதியிலிருந்து பதிவுசெய்தல் சான்றிதழை வழங்குவதற்காக 06 மாதங்களிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலமாக குறிப்பிடத்தக்க அளவு தாமதங்கள் இடம்பெற்றிருந்தன. உத்தியோகத்தர்கள் போதியளவில் இல்லாமை, விண்ணப்பதாரர்களால் மறுதலிப்பு வழங்குவதில் தாமதங்கள், மேன்முறையீடுகளை கவனத்தில் கொள்ளுதல், கலந்துரையாடலுக்காக காலம் எடுத்தல் முதலியன இத் தாமதத்திற்கான காரணமாக இருந்தன. ஆண்டின் போது பதிவு செய்யப்பட்ட வணிகக் குறியீடுகளில் 2007 வரை பெற்றுக்கொள்ளப்பட்ட 2,899 விண்ணப்பங்கள் 2,899 ஆக இருந்ததுடன் அவை பதிவு செய்யப்பட்ட சந்தர்ப்பம் அளவில் அதன் 10 ஆண்டுகள் செல்லுபடியாகும் காலமும் கடந்திருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதிவரை பதிவு செய்வதற்காக பரீட்சிக்கப்பட்டு வந்த 32,716 கோவைகளும், வேலை ஆரம்பிக்கப்படாத 1,968 கோவைகளும் காணப்பட்டதுடன் அவற்றிற்கு மேலதிகமாக விண்ணப்பதாரர்களின் மறுதலிப்புக்கள் எதிர்ப்புகளைப் பெறுதல்கள், கலந்துரையாடல்களை நடாத்துதல், நீதிமன்ற கட்டளைகளைப் பெறுதல், வர்த்தமானியில் பிரசுரித்தல் முதலிய விடயங்களின் அடிப்படையில் பதிவு செய்வது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட கோவைகள் 35,971 ஆகக் காணப்பட்டது.

(iii) 2017 ஆம் ஆண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட 11,281 விண்ணப்ப படிவங்களில் எதுவித விண்ணப்ப படிவத்தையும் கணக்காய்வுத் திகதியான 2018 ஏப்ரல் வரையும் பதிவு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் கடந்த ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட 10,825 விண்ணப்ப படிவங்களில் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஏப்ரல் வரை 51 கோவைகள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தன. கடந்த ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்பட்டு பதிவு செய்தல் நடைமுறைகளின் பல்வேறு கட்டங்களில் காணப்பட்ட கோவைகளின் நடவடிக்கை எடுத்தல் இதற்கு காரணமாக இருந்தது.

(iv) புலமைச் சொத்து அதிகாரச்சட்டத்தின் 119(3) ஆம் பிரிவின் பிரகாரம் வணிகக் குறியீடுகளின் செல்லுபடியாகும் காலம் காலவதியாகி 06 மாதங்களுக்குள் மிகைக் கட்டணத்தைச் செலுத்துவதன் அடிப்படையில் புதுப்பிக்கக்கூடியதாக இருந்த போதிலும் செல்லுபடியாகும் காலம் கடந்த பின்னர் பதிவு செய்தல் சான்றிதழ் வழங்கிய வணிகக் குறியீடுகளுக்காக புதுப்பித்தல் செய்வதற்கு சான்றிதழில் கையொப்பமிட்ட திகதியிலிருந்து ஒரு ஆண்டு காலம் வழங்கப்பட்டிருந்தது. பதிவு செய்தல் நடைமுறையிலுள்ள பல்வேறு கட்டங்களில் இடம்பெற்ற தாமதங்கள் இதற்கான காரணமாக இருந்தது.

(v) சர்வதேச ரீதியில் வணிகக் குறியீடுகளைப் பதிவு செய்யும் உடன்பாட்டுப் பத்திரத்தை அணுகுவதற்கான வசதிகளை வழங்கும் செயற்திட்ட நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 யூன் வரை அதற்குரிய நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்காக நிதி அமைச்சு நிதிஏற்பாட்டிலிருந்து புதிய சேவர் இயந்திரத்தை கொள்வனவு செய்து நிறுவுவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை 2016 திசெம்பர் 30 ஆந் திகதி தகவல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்டு ரூபா 32.50 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. உரிய உடன்படிக்கைக் காலமும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் முடிவடைந்திருந்ததுடன் உரிய இயந்திரம் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 யூலை மாதம் வரையும் கிடைத்திருக்கவில்லை.

**(ஆ) புதிய ஆக்கங்களுக்காக ஆக்கவுரிமை உத்தரவுப் பத்திரங்களை பதிவுசெய்தல்**

---

(i) மீளாய்வாண்டில் பதிவு செய்யப்பட்ட ஆக்கவுரிமை உத்தரவுப் பத்திரங்களின் எண்ணிக்கை 181 ஆக இருந்ததுடன் அவை 2005 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களாகும். அதற்கிணங்க ஆக்கவுரிமை உத்தரவுப் பத்திரங்களை பதிவு செய்வதற்காக 05 மாதங்களிலிருந்து 12 ஆண்டுகள் வரையான காலம் எடுத்திருந்தது. தெரிவுக் கணக்காய்விற்கு உட்டுபட்டுத்தப்பட்ட 10 கோவைகளுக்குரிய ஆக்கவுரிமை உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அவற்றினைப் பரீட்சிப்பதற்காக விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து 08 மாதங்களிலிருந்து 10 ஆண்டுகள் வரையான காலம் எடுத்திருந்தது. 2017 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட 542 விண்ணப்பங்களில் 04 விண்ணப்பங்களை மாத்திரம் பதிவு செய்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

(ii) ஆக்கவுரிமை உத்தரவுப் பத்திரங்களை வழங்கி இரண்டாவது ஆண்டு கடந்தும் அதனை செயற்பாட்டில் வைத்துக் கொள்வதற்கு ஆக்கவுரிமை உத்தரவுப் பத்திரதாரர் கருதுவாராயின் அதிகாரச்சட்டத்தின் 83(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆக்கவுரிமை உத்தரவுப்பத்திரம் வருடாந்தம் உரிய கட்டணத்தை செலுத்தி புதுப்பித்துக் கொள்ளப்படுதல் வேண்டும். எனினும், 1997 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டின் இறுதிவரை 3795 ஆக்கவுரிமை உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தும் 2017 ஆம் ஆண்டின் போது அவற்றில் 525 மாத்திரம் புதுப்பித்தல் செய்யப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் இறுதிவரை பதிவு செய்தல் நடைமுறையின் பல்வேறு கட்டங்களில் 2582 கோவைகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அவற்றில் தவறுகளைத் தெரிவித்து அனுப்பி வைக்கப்பட்ட 1106 கோவைகள் காணப்பட்ட போதிலும் பதிலளிக்கும் காலம் கடந்த கோவைகள் சம்பந்தமாக அதிகாரச்சட்டத்தின் 78(2) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்திகதி வரை வேலைகள் ஆரம்பிக்கப்படாத கோவைகளின் எண்ணிக்கை 51 ஆக இருந்ததுடன்

அக்கோவைகளுக்கு மத்தியில் 2017 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட 08 கோவைகளும் 2016 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட 03 கோவைகளும் 2014 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட 17 கோவைகளும் 2013 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட 08 கோவைகளும் 2012 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட 09 கோவைகளும் 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட 06 கோவைகளும் இருந்தன.

**(இ) தொழில்நுட்ப திட்டங்களை பதிவு செய்தல்**

(i) மீளாய்வாண்டில் பதிவு செய்யப்பட்ட தொழில்நுட்ப திட்டங்களுக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை 330 ஆக இருந்ததுடன் அவை 2008 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிலும் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையும் கிடைத்த விண்ணப்பங்களாகும். அவற்றுள் 2008 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட 08 விண்ணப்பங்கள் இருந்ததுடன் விண்ணப்பதாரர்களால் வர்த்தமானியில் பிரசுரிக்கும் கட்டணத்தை செலுத்துவதிலுள்ள தாமதத்தின் அடிப்படையில் அந்த தாமதம் இடம்பெற்றிருந்தது. 2017 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட 336 விண்ணப்பங்களில் ஆண்டின்போது 83 விண்ணப்பங்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டின் இறுதிவரை பதிவு செய்தல் நடைமுறையில் பல்வேறு கட்டங்களில் 379 கோவைகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 4.1.2 தொழில்நுட்ப மற்றும் புத்துருவாக்கல் நிலையத்தை ஆரம்பித்தல்

தொழில்நுட்ப தகவல்களை வினைத்திறனாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல் மற்றும் தொழில்நுட்ப தகவல்களுக்காக பொதுமக்களுக்குத் தேவையான அணுகுதல்களை வழங்குவதன் மூலம் புத்துருவாக்கல்களை ஊக்குவித்தல் மற்றும் புலமைச் சொத்து தொடர்பாக பொதுமக்களின் தெளிவுபடுத்தல்களை மேம்படுத்துவதற்காக நாட்டிலுள்ள 09 மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் 12 புத்துருவாக்கல் நிலையங்களை 2014 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை மேல் மாகாணத்தில் 09 மற்றும் கிழக்கு மாகாணத்தில் 01 என்பனவாக 02 மாகாணங்களை மாத்திரம் உள்ளடக்கும் வகையில் மத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

### 4.1.3 பயிற்சி மற்றும் தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

பயிற்சி மற்றும் தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 900,000 செலவு செய்து 14 தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் 05 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்ததுடன் அவற்றிற்காக ரூபா 801,989 செலவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) பதவியணியிலுள்ள உத்தியோகத்தர்கள் 24 உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் மற்றும் 12 வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்டிருந்தும் 17 உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 09 வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மாத்திரம் உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தார்கள். இதற்கு மேலதிகமாக பணிப்பாளர் நாயகம் மற்றும் அமைச்சின் 05 உத்தியோகத்தர்கள் முறையே 03 மற்றும் 05 வெளிநாட்டுக் கருத்தரங்குகளில் பங்குபற்றியிருந்தார்கள். இதற்காக ரூபா 2,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் செலவு செய்யப்பட்ட பணம் ரூபா 1,840,128 ஆகும்.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புலமைச் சொத்து அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களின் பிரகாரம் தனிப்பட்ட முகவர்களாக பதிவு செய்யும் கட்டணங்களை விட முகவர்களைப் புதுப்பிப்பதற்காகச் செலுத்த வேண்டிய கட்டணம் அதிகரித்த பெறுமதியைக் கொண்டிருந்ததனால் 03 ஆண்டுகளுக்குப் பின்னர் பதிவினைப் புதுப்பிப்பதற்குப் பதிலாக புதிதாகப் பதிவுசெய்தலில் ஈடுபடுவதில் முக்கியத்துவம் காணப்பட்டது.

(ஆ) 2006 இன் 01 ஆம் இலக்க புலமைச் சொத்து பிரேரணையின் பிரகாரம் 2006 மே 17 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட புலமைச் சொத்து அலுவலகத்தினால் வழங்கப்படுகின்ற செயற்பாடுகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2003 இன் 36 ஆம் இலக்க புலமைச்சொத்து அதிகாரச்சட்டத்தில் முகவர்களைப் பதிவு செய்வதற்குரிய 175(5) ஆம் பிரிவின் பிரகாரம் செல்லுபடியாகும் காலம் காலவதியாகி 06 மாதங்களுக்குள் நிர்ணயிக்கப்படுகின்ற மிகைக் கட்டணத்தை செலுத்துவதன் அடிப்படையில் பதிவினை புதுப்பித்துக் கொள்ளக்கூடியதாக இருந்தபோதிலும் 2006 இன் 01 ஆம் இலக்க புலமைச் சொத்து பணிப்புரை 58 இன் 10(ii) ஆம் பிரிவின் பிரகாரம் பதிவு செய்தல்காலம் காலவதியாகி 02 வாரங்களுக்குள் புதுப்பித்தல் கட்டணத்தைச் செலுத்தவில்லையாயின் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முரண்பாட்டை சரி செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை முடியாதிருந்தது.

(ஈ) கடந்த ஆண்டின் போது ஒரு கட்டிடத்தை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான பெறுகை நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.4.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி செல்லுபடியாகும் காலத்திற்குள் பெறுகை நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு பெறுகை குழுவிற்கு முடியாமையின் காரணமாக அப்பெறுகைகளை நிறுத்தி மீண்டும் கேட்பு மனுக்களைக் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(உ) சர்வதேச ரீதியில் வணிகக் குறியீடுகளைப் பதிவு செய்யும் கூட்டு உடன்படிக்கையில் நுழைவதற்காக புலமைச் சொத்து அதிகாரச்சட்டத்தில் தற்பொழுது அமுல்படுத்தப்படுகின்ற சட்டங்களைத் திருத்துவதற்கு மற்றும் அதனுடன் அதிகாரச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு முடிவுறுத்தப்படாமை மற்றும் பதவியணியிலுள்ள சிரேஷ்ட மட்டப் பதவிகளில் 50 சதவீதமான வெற்றிடங்கள் காணப்படுதல் நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஊ) கூட்டுறவு மொத்த வர்த்தக ஸ்தாபனத்திற்குச் சொந்தமான காணியில் புலமைச் சொத்துக்களை சந்தைப்படுத்தும் மேம்பாட்டு நிலையம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற போதிலும் அதற்கு அண்மையிலுள்ள காணி சுற்றுலா கைத்தொழில் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகச் சுவீகரிக்கப்பட்டதன் காரணமாக அதற்காக நிறுவனத்தினால் செலவிடப்பட்ட ரூபா 22,298,751 பணத்தை நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அறவீடு செய்தவற்காக 2015 மார்ச் 13 ஆந் திகதிய அமப/15/0272/625/007 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்திற்காக 2015 ஏப்ரல் 23 ஆந் திகதி அங்கீகாரம் கிடைத்திருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி வரை அப்பணத்தை அறவீடு செய்ய முடியாதிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்ளுதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்ட கடிதம் மற்றும் ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக அலுவலகம் தமது நோக்கெல்லையின் கீழ் கொண்டு வந்துள்ள செயற்பாடுகள் சம்பந்தமாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டிருந்தும் தமது நோக்கெல்லையின் பிரகாரம் அடைந்து கொள்ளப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1)ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளகக்கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 04 சதவீதத்திலிருந்து 08 சதவீதம் வரையான வீச்சுடைய முரண்களும் பாதீடு செய்யப்பட்ட செலவுகளுக்கும் உள்ளபடியான செலவுகளுக்குமிடையே 10 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சுடைய முரண்களும் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 6.3 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையும் வருடாந்த கணக்குகளும்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் வருடாந்த கணக்குகள் சம்பந்தமாக 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4.4. ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2014 ஆம் ஆண்டிற்கான அந்த அறிக்கை 2018 ஆகஸ்ட் மாதத்தின் போது பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகள் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 யூலை 18 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பலவீனங்கள் அவ்வவ்போது புலமைச் சொத்து ஆதனங்கள் பணிப்பாளர்கள் நாயகத்தின் அவதானத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) வணிகக் குறியீடு, ஆக்க உரிமை உத்தரவுப் பத்திரம் மற்றும் தொழில்நுட்ப திட்டங்களைப் பதிவுசெய்தல். | (i) அலுவலகத்திற்கு கிடைக்கின்ற விண்ணப்பங்களைப் பரீட்சித்தல், வர்த்தமானியில் பிரிசுரித்தல், பதிவு செய்தல், புதுப்பித்தல் ஆகிய நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க அளவான தாமதங்கள் காணப்பட்டதுடன் ஆண்டின் இறுதியளவில் பதிவு செய்வதற்கு உள்ள கோவைகளின் அளவு எவ்வளவு என்பதனைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை காணப்படாமை. |
| | (ii) குறியீடுகளைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கிடைத்த பின்னர் அவை மறுக்கப்பட்டதன் அடிப்படையில் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அக்கலந்துரையாடல்களை முடிவுறுத்துவதற்காகவும் குறிப்பிடத்தக்க அளவான தாமதங்கள் காணப்பட்டமை. |
| | (iii) ஆக்க உரிமை உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ப்பங்களைச் சமர்ப்பித்ததன் பின்னர் மீண்டும் அது சம்பந்தமாக மீளப் பெறுதலுக்கான கோரிக்கைகளை உரிய விண்ணப்பதாரர்கள் மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| (ஆ) பதவியணியினர் நிர்வாகம் | அலுவலகத்தின் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 12 பதவிகளில் 06 பதவிகளும், இரண்டாம் மட்டத்திலுள்ள 66 பதவிகளில் 22 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்கள் அலுவலகத்தின் செயலாற்றலில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. |
| (இ) பதிவேட்டுப் பொருள் கட்டுப்பாடு | ஒவ்வொரு பிரிவுகளிலும் காணப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பாக இன்வென்டரி பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் களஞ்சியத்திலுள்ள பதிவேட்டில் மாத்திரம் அனைத்து சொத்துக்களும் உள்ளடக்கப்பட்டிருந்தமை |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | முகவர்களைப் பதிவு செய்தல் | | வியாபாரக் குறிகள், ஆக்க உரிமை உத்தரவுப் பத்திரங்கள் தொழில்நுட்பத் திட்டங்கள் என்பவை தொடர்பான நடவடிக்கைகளை அலுவலகத்தில் பதிவு செய்தல் முகவர்களினூடாக இடம்பெறுவதுடன் 03 ஆண்டுகள் காலத்திற்கு பதிவு செய்த முகவர்களின் பதிவை புதுப்பிப்பதற்காக மேற்கொண்ட வேண்டுகோள்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் போது வேண்டுதல் செய்த திகதியிலிருந்து அதற்காக 03 மாதங்களிலிருந்து 18 மாதங்கள் வரையான தாமதம் இடம்பெற்றிருந்தமை. |
| (உ) | தரவு முறைமைக்குள் அறிக்கைகளைப் பேணுதல் | (i) | ஆண்டின் ஆரம்பத்திலும் ஆண்டின் இறுதியிலும் பதிவுசெய்வதற்குள்ள கோவைகளின் எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியாமை. |
| | | (ii) | ஏதாவது குறித்த திகதியில் காணப்பட்ட செயலாற்றல் தொடர்பான அறிக்கையை பின்னைய ஒரு திகதியில் பெற்றுக்கொள்ள முடியாமை |
| | | (iii) | தரவுகளானது கோவைகளின் பிரகாரம் அன்றி செய்யப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கைகளின் பிரகாரம் காணப்படுதல். |
| | | (iv) | செயலாற்றல் சம்பந்தமாக நிதி அறிக்கைகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களுக்கும் கணக்காய்விற்காகத் தகவல்களைக் கோருவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கும் இடையே வித்தியாசங்கள் காணப்படல். |
| (ஊ) | தெளிவுபடுத்தல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | | திட்டமிடப்பட்டவாறு தெளிவுபடுத்தல்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். |
| (எ) | பெறுகைகள் | | பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படல் |